ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

______________

5-ஆம் திருமொழி - தழைகளும்

______*_______

* அட்டுக்குவிசோற்றுப்ப்ருப்பதமும்
தயிர்வாவியும்நெய்யளறும்அடங்கப்
பொட்டத்துற்றி * மாரிப்பகைபுணர்த்த
பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை *
வட்டத்தடங்கண்மடமான்கன்றினை
வலைவாய்ப்பற்றிக்கொண்டு * குறமகளிர்
கொட்டைத்தலைப்பால்கொடுத்துவளர்க்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (1)

வழுவொன்றுமில்லாச்செய்கைவானவர்கோன்
வலிப்பட்டுமுனிந்துவிடுக்கப்பட்ட *
மழைவந்துஎழுநாள்பெய்துமாத்தடுப்பு
மதுசூத்ன்எடுத்துமறித்தமலை *
இழவுதரியாததோரீற்றுப்பிடி
இளஞ்சீயம்தொடர்ந்துமுடுகுதலும் *
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொரும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையா. (2)

அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரும்
ஆனாயரும்ஆநிடையும்அலறி *
எம்மைச்சரணென்றுகொள்ளென்றிரப்ப
இலங்காழிக்கையெந்தையெடுத்தமலை *
தம்மைச்சரணென்றதம்பாவையரைப்
புனமேய்கின்றமானினம்காண்மினென்று *
கொம்மைப்புயக்குன்றர்சிலைகுனிக்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (3)

கடுவாய்ச்சினவெங்கண்களிற்றினுக்குக்
கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல் *
அடிவாயுறக்கையிட்டுஎழப்பறித்திட்டு
அமரர்பெருமான்கொண்டுநின்றமலை *

கடல்வாய்ச்சென்றுமேகம்கவிழ்ந்திறங்கிக்
கதுவாய்ப்படநீர்முகந்தேறி * எங்கும்
குடவாய்படநின்றுமழைபொழியும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (4)

வானத்திலுள்ளீர்! வலியீர்உள்ளீரேல்
அறையோவந்துவங்குமினென்பவன்போல் *
ஏனத்துருவாகியஈசன்எந்தை
இடவனெழவங்கியெடுத்தமலை *
கானக்களியானைதன்கொம்பிழந்து
கதுவாய்மதம்சோரத்தன்கையெடுத்து *
கூனல்பிறைவேண்டிஅண்ணாந்துநிற்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (5)

செப்படுடையதிருமாலவான்தன்
செந்தாமரைக்கைவிரலைந்தினையும் *
கப்பாகமடுத்துமணிநெடுந்தோள்
காம்பாகக்கொடுத்துக்கவித்தமலை *
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி
இலங்குமணிமுத்துவடம்பிறழ *
குப்பாயமெனநின்றுகாட்சிதரும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (6)

படங்கள்பலவுமுடைப்பாம்பரையன்
படர்பூமியைத்தாங்கிக்கிடப்பவன்போல் *
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத்
தாமோதரந்தங்குதடவரைதான் *
அடங்கச்சென்றுஇலங்கையையிடழித்த
அனுமன்புகழ்பாடித்தமகுட்டன்களை *
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்தும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (7)

சலமாமுகில்பல்கணப்போர்க்களத்துச்
சரமாரிபொழிந்துஎங்கும்பூசலிட்டு *
நலிவானுறக்கேடகம்கோப்பவன்போல்
நாராயணன்முன்முகம்காத்தமலை *
எலவேய்குரம்பைத்தவமாமுனிவர்
இருந்தார்நடுவேசென்றுஅணார்சொறிய *
கொலைவாய்ச்சினவேங்கைகள்நின்றுறங்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (8)

வன்பேய்முலையுண்டதோர்வாயுடையன்
வந்தூணெனநின்றதோர்வன்பரத்தை *
தன்பேரிட்டுக்கொண்டுதரணித்தன்னில்
தாமோதரந்தாங்குதடவனைதான் *
முன்பெவழிகாட்டமுகக்கணங்கள்
முத்கில்பெய்துத்ம்முடைக்குட்டன்களை *
கொம்பேற்றியிருந்துகுதிபயிற்றும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (9)

கொடியேறுசெந்தாமரைக்கைவிரல்கள்
கோலமும்அழிந்திலவாடிற்றில *
வடிவேறுதிருவுகிர்நொந்துமில
மணிவண்ணன்மலையுமோர்சம்பிரதம்
முடியேறியமாமுகில்பல்கணங்கள்
முன்னெற்றிநரைத்தனபோல * எங்கும்
குடியேறியிருந்துமழைபொழியும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே. (10)

* அரவில்பள்ளிகொண்டுஅரவம்துரந்திட்டு
அரவப்பகையூர்தியவனுடைய *
குரலில்கொடிமுல்லைகள்நின்றுறங்கும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடைமேல் *
திருவில்பொலிமறைவாணர்புத்தூர்
திகழ் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனநன்குடைப்பத்தருள்ளார்
பரமானவைகுந்தம்நண்ணுவரே. (11)

அடிவரவு : அட்டு வழு அம்மை கடு வான் செப்பாடு படங்கள் சலம் வன்பேய் கொடி அரவில் நாவல்